# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXXI YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 FEBRUARY No. 02


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 34:15-22

15. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

16. தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப் பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

17. நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.

18. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.

19. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

20. அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்; அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.

21. தீமை துன்மார்க்கனைக் கொல்லும்; நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவார்கள்.

22. கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்; அவரை நம்புகிற ஒருவன் மேலும் குற்றஞ்சுமராது.

# உங்கள் முழுமையான அர்ப்பணிப்பே அபரிமிதமான ஆசீர்வாதங்களுக்கு வழிவகுக்கும்!

## YOUR COMPLETE SURRENDER WILL LEAD TO ABUNDANT BLESSINGS!

சகோதரி ஏஞ்சலின்





நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்!

ஜனவரி மாதம் உங்களுக்கு ஆசீர்வாதமாகவும், இந்த ஆண்டின் தொடக்கம் வலிமையாகவும் இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். பலருக்கு, ஜனவரி மாதம் பல வழிகளிலும் ஒரு சவாலான மாதமாக இருந்திருக்கலாம். 2026–ஆம் ஆண்டை நோக்கி நீங்கள் பயணிக்கும்போது, தேவனுடைய சமாதானமும், கிருபையும், பெலமும் உங்களைத் தொடர்ந்து தாங்கட்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.




நமக்கு ஒரு நல்ல துவக்கம் முக்கியம். ஆனால், அதைவிட நாம் எப்படி முடிக்கிறோம் என்பதுதான் முக்கியமாகும். இந்த ஆண்டை தேவன் நமக்கு கிறிஸ்து இயேசுவுக்குள் கனியுள்ளதாகவும், வெற்றியுள்ளதாகவும் மாற்றுவார் என்றும், 2026–ஆம் ஆண்டின் முடிவு அதன் தொடக்கத்தை விட அதிக


தொடர்ச்சி 3-ம் பக்கம்.....





அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு மொழிகளில்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு - காலை 5.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள்! பிறருக்கும் Share பண்ணுங்கள்!!

ECHO OF HIS CALL - (Marching towards 60th year)
Estd. 1969



## உங்கள் அன்பு சகோதரிடமிருந்து...



> ... கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்.
>
> - உபாகமம் 28:13

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
Ex MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.
EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org
YOUTUBE CHANNEL
Echo of His Call

கர்த்தருக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்!



நமது செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடைபெற்ற கிறிஸ்மஸ் பெருவிழா

இந்த மாதம் ஏராளமான உள்ளூர் ஊழியங்களும், ஊழியப் பிரயாணங்களும் எங்களுக்கு உள்ளன. கடந்த மாத ஊழியங்களை கர்த்தர் மிகவும் ஆசீர்வதித்தார்.

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** நடைபெற்ற கிறிஸ்மஸ் பெரு விழாவில் பள்ளி செயலாளரான டாக்டர் P.E.R. பிரேம்சந்த் அவர்கள் செய்தியளித்தார்கள்.

மேலும் டிசம்பர் மாதம் நம் **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்கள் மற்றும் சபையினர் மூலம் ஏராளம் சுவிசேஷப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த வருடத்தில் நடந்த நமது யூடியூப் ஊழியத்தில் பெரிய வளர்ச்சியைப் பார்க்கிறோம். உலகளாவிய அளவில் ஏராளமான மக்கள் நமது செய்திகளைக் கண்டு



யூடியூப் ஊழியக் குழுவினர்

ஆசீர்வாதம் பெற்றுள்ளனர். இவ்வூழியத்தில் ஈடுபட்டுள்ள நம் ஊழியக் குழுவினரை இன்னும் வல்லமையாக தேவன் பயன்படுத்த ஜெபியுங்கள்.

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ▫ BIBLECOR - Postal Courses (3 languages) ▫ YouTube Ministry ▫ Online Courses ▫ Theological Correspondence Courses (2 languages) ▫ Church Planting ▫ Nehemiah Bible Colleges ▫ Gospel Printing Press ▫ Great Commission Partners ▫ St. Paul's Matriculation School ▫ Crusades ▫ Community Development

நம் சபையில் இப்போது புலம் பெயர்ந்தோருக்கான இந்தி மொழியில் இந்தி ஜெப ஊழியம் ஒவ்வொரு புதன் கிழமையும் மாலை 7.00 மணிக்கு நடைபெறுகிறது. பிரயாசம் நிறைந்த இந்த ஊழியத்திற்கு உங்கள் ஜெபம் தேவை.

போராட்டங்களையும், கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் முன்னேறிச் செல்லும் நமது ஊழியர்களுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள்.

ஊழியங்கள் வளருகின்றன. தொடர்ந்து உங்கள் ஜெபத்தால் எங்களைத் தாங்குங்கள்.

தேவகிருபை உங்களோடு இருப்பதாக! ஆமென்.

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் சகோதரரான**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்,**

மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

மகிமையும் ஆசீர்வாதமும் நிறைந்ததாக இருக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

## நன்றாகத் தொடங்கினாலும் நன்றாக முடிக்காத ஒரு இராஜா!

தனது பயணத்தை வலிமையாகத் தொடங்கியும், அவனது முடிவு சோகமாக அமைந்த அமத்சியா ராஜாவை இது எனக்கு நினைவூட்டுகிறது. வேதாகமம் அதற்கான காரணத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது:

**அவன் (அமத்சியா) கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் முழுமனதோடே அப்படிச் செய்யவில்லை.** 2 நாளாகமம் 25:2.

## யார் இந்த அமத்சியா?

- ஏழு வயதில் இராஜாவான யோவாஸ் இராஜாவின் மகன்.
- அவன் யூதாவின் ஒன்பதாவது இராஜா.
- அவனது சரிதை 2 இராஜாக்கள் 14 மற்றும் 2 நாளாகமம் 25-இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.



யூதாவின் ஒன்பதாவது இராஜா அமத்சியா

வேதாகமம் ஒரு குறிப்பிடத்தக்க, ஆனால் ஆழ்ந்த கவலைக்குரிய ஒரு விஷயத்தை நமக்குச் சொல்கிறது.

**அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் முழுமனதோடே அப்படிச் செய்யவில்லை.**

- உத்தம இருதயம் இன்றி தேவனைச் சேவிப்பது என்றால் என்ன ?
- தேவனுக்கு முன்பாகச் சரியானதைச் செய்தும், முழுமையாக ஒப்புக் கொடுக்கப்படாமல் இருப்பது சாத்தியமா ?
- நம்முடைய இருதயம் பிரிந்திருக்கும்போது, நாம் வெளிப்படையாக தேவனைச் சேவிக்க முடியுமா ?

அமத்சியா வேதாகமத்தில் உள்ள மிகவும் சோகமான இராஜாக்களில் ஒருவன். அவன் பொல்லாதவனாக இருந்ததால் அல்ல, மாறாக அவன் ஏறக்குறைய நல்லவனாகவும், பாதி கீழ்ப்படிதலுள்ளவனாகவும், அரைகுறை மனதுள்ளவனாகவும் இருந்ததால்தான்.

- அவன் கீழ்ப்படிந்தான்.
- நன்மை செய்தான்.
- தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றினான்.

ஆனாலும் அவனது இருதயம் முழுமையாக ஒப்புக் கொடுக்கப்படவில்லை.

இது அமத்சியாவின் வாழ்க்கையில் மட்டுமல்ல, இன்று அநேக விசுவாசிகளின் நிலையுமாகும். நாம் தேவனை நேசிக்கிறோம். நாம் அவரைப் பின்பற்றுகிறோம். ஆனாலும், நம் வாழ்வில் நாம் அவருக்கு அனுமதியளிக்காத சில பகுதிகள் இருக்கலாம்.

நாம்:

- ஆலயத்திற்குச் செல்லலாம்.
- உண்மையுடன் ஊழியம் செய்யலாம்.
- தர்மம் செய்யலாம்.
- தேவையுள்ளவர்களுக்கு உதவலாம்.
- பல காரியங்களில் கீழ்ப்படியலாம்.

ஆனால், தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயம் எங்கே இருக்கிறது ? என்பதுதான் முக்கியமான கேள்வியாகும். என் தந்தை அடிக்கடி சொல்வார்:

"பாதி கீழ்ப்படிதல் என்பது முழுமையான கீழ்ப்படியாமையே ஆகும்."

2026-ஆம் ஆண்டை நாம் சிறப்பாக முடிக்க விரும்பினால், இந்த ஆண்டின் தொடக்கத்தில் நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரு கேள்வி:

"நான் உண்மையுள்ள இருதயத்துடன் சரியானதைச் செய்கிறேனா அல்லது அது இல்லாமலேயே செய்கிறேனா ?" என்பதாகும்.

## மிக அவசர செய்தி !




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள் !

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India
Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org

## அமத்சியாவின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள்!

யூதா மற்றும் இஸ்ரவேல் இராஜாக்களின் வாழ்க்கையைப் பற்றி தியானிப்பதை நான் விரும்புகிறேன். அவர்களுடைய வாழ்க்கைச்சரிதைகள் நமது சொந்த வாழ்க்கைக்கு ஆழமான பாடங்களையும், கண்ணாடிகளையும் வழங்குகின்றன. அமத்சியா நன்றாகத் தொடங்கினார். ஆனால், காலப்போக்கில் ஏற்பட்ட ஒரு தவறு கடுமையான விளைவுகளுக்கு வழிவகுத்தது.







நன்றாகத் தொடங்கினாலும் நன்றாக முடிக்காத அமத்சியா!

### 1. அர்ப்பணிப்பு!

#### அமத்சியா நன்றாகத் தொடங்கினார்!

(2 நாளாகமம் 25:1–10)

**அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனாகிய தாவீதைப் போலல்ல; தன் தகப்பனாகிய யோவாஸ் செய்தபடியெல்லாம் செய்தான்.** – 2 இராஜாக்கள் 14:3.



அமத்சியா தன் தகப்பனாகிய தாவீதைப் போலல்ல; தன் தகப்பனாகிய யோவாஸ் செய்தபடியெல்லாம் செய்தான்

அமத்சியா ஒரு பலமான தொடக்கத்தைக் கொண்டிருந்தார். மேலும், பல காரியங்களில் கீழ்ப்படிதலை வெளிப்படுத்தினார்.

#### அ. தேவனுடைய வார்த்தைக்கும், நீதிக்கும் கீழ்ப்படிதல்!

அமத்சியா சிம்மாசனத்திற்கு வந்தபோது, தன் தகப்பனைக் கொலை செய்தவர்களுக்கு நீதி வழங்கினார். இருப்பினும், அவர் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர்களுடைய பிள்ளைகளைக் கொல்லவில்லை:

**பிள்ளைகள் தங்கள் தகப்பன்மார்களின் பாவத்திற்காகக் கொல்லப்படக்கூடாது** (உபாகமம் 24:16).

இதற்குத் தைரியம் தேவைப்பட்டது. அவர் வாரிசுகள் பழிவாங்கக்கூடும் என்று பயந்திருக்கலாம். ஆனால், **அவர் கீழ்ப்படிதலைத் தேர்ந்தெடுத்தார்.** (2 இராஜாக்கள் 14:6) வாரிசுகளாக வரக்கூடிய **அனைவரையும் கொன்ற அரசி அத்தாலியாவைப்** (2 இராஜாக்கள் 11:1) போலல்லாமல், அமத்சியா தேவனுடைய பிரமாணத்தை மதித்தார். இவ்வாறு அவர் நன்றாகத் தொடங்கினார்.

#### ஆ. தனிப்பட்ட இழப்பு இருந்தபோதிலும் கீழ்ப்படிதல்!



**நான் கொடுத்த நூறு தாலந்திற்காகச் செய்யவேண்டியது என்ன ?**

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

பகிர்தல் (Share) (கலாத்தியர் 6:2), உதவி செய்தல் (Support) (ரோமர் 12:13) மற்றும் துரிதப்படுத்துதல் (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2026 பிப்ரவரி 19 முதல் 2026 மார்ச் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

- பிப்ரவரி 19 ⇨ அற்புதமான ஊடக குழுவினரின் மூலம் **அழைப்பின் எதிரொலி யூடியூப் சானல்** தங்கு தடையின்றி ஒளிபரப்பி வருகின்ற கிருபைக்காக ...
- பிப்ரவரி 20 ⇨ நமது பங்காளர்களின் உறுதுணை மற்றும் பொருளாதார ஆதரவிற்காக ...
- பிப்ரவரி 21 ⇨ நமது 2026–ம் வருட வாக்குத்தத்த அட்டையின் அச்சுப்பணிகள் மற்றும் தபால்பணிகள் சிறப்புடன் நிறைவடைந்ததற்காக ...
- பிப்ரவரி 22 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரிகளில்** நடைபெற்ற கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட சிறப்பு நிகழ்ச்சிகளை கர்த்தர் ஆசீர்வதித்ததற்காக ...
- பிப்ரவரி 23 ⇨ இளம்பிராயத்தினரை உற்சாகத்தினால் நிரப்பி அனைத்து சபை நடவடிக்கைகளிலும் பங்கேற்க செய்த கிருபைக்காக ...
- பிப்ரவரி 24 ⇨ **அழைப்பின் எதிரொலி யூடியூப் சானல்** மற்றும் **ஊடக ஊழியம்** மூலமாக சந்திக்காத பன்மொழி மக்களை சந்திக்க வைத்த கிருபைக்காக ...
- பிப்ரவரி 25 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...
- பிப்ரவரி 26 ⇨ நமது சபை ஊழியப்பணிகள் மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட கிருபைக்காக...
- பிப்ரவரி 27 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்து வருகிறதற்காக ...
- பிப்ரவரி 28 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் நல்ல உடல்நலத்துடனும் தேவபாதுகாப்புடனும் இருப்பதற்காக ...
- மார்ச் 01 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **வேதாகமக்கல்வி** முறைகளின் வளர்ச்சிகளுக்காக ...
- மார்ச் 02 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபையின் ஞாயிறு ஆராதனைகளில் வழங்கப்படும் தேவச்செய்திகளின் வல்லமைக்காக ...
- மார்ச் 03 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக ...
- மார்ச் 04 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

- மார்ச் 05 ⇨ கிறிஸ்தவ போதகர்கள் கள்ள உபதேசம் செய்யாமல் வேதாகம முறைப்படி பிரசங்கிக்க ...
- மார்ச் 06 ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...
- மார்ச் 07 ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...
- மார்ச் 08 ⇨ உலக நாடுகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளவயதினர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி ...
- மார்ச் 09 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும்...
- மார்ச் 10 ⇨ முதியோர் இல்லங்களில் உள்ள வயதானவர்களுக்காக ...
- மார்ச் 11 ⇨ அரசு பொதுத்தேர்வுக்கு தயாராகும் நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மாணவர்கள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சியடைய...
- மார்ச் 12 ⇨ **அழைப்பின் எதிரொலி யூடியூப் சானல்** மூலம் சுவிசேஷம் சந்திக்கப்படாத மக்களை சந்திக்கப்பட வேண்டி..
- மார்ச் 13 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** பட்டமளிப்பு விழா சிறப்புடன் நடைபெற வேண்டி...
- மார்ச் 14 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் தொடர்ந்து ஆசீர்வதித்து வர வேண்டி...
- மார்ச் 15 ⇨ உலக தேசங்கள் அனைத்தும் யுத்தங்களிலிருந்து தேவ பாதுகாப்புடன் திகழ ...
- மார்ச் 16 ⇨ உலகமெங்கும் களப் பணியாளர்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைத்திட...
- மார்ச் 17 ⇨ உலக நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஆசீர்வாதங்களை வேண்டி...
- மார்ச் 18 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் குடும்பத்தினர் அனைவரையும் சகலவிதமான தீய சக்திகளின் வல்லமைக்கு விலக்கிக் காத்திட வேண்டி...

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

அமத்சியா இஸ்ரவேலிலிருந்து 1,00,000 வீரர்களைப் பணிக்கு அமர்த்தினார். இது ஒரு விலையுயர்ந்த முதலீடு. அந்தத் தீர்க்கதரிசி அவர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தியபோது, ... **அமத்சியா: 'அப்படியானால் நான் இஸ்ரவேலின் சேனைக்குக் கொடுத்த நூறு தாலந்திற்காகச் செய்யவேண்டியது என்ன' .. . என்றான் ...** 2 நாளாகமம் 25:9.

அதற்குத் தீர்க்கதரிசி: இதைவிட ... **அதைப் பார்க்கிலும் அதிகமாய்க் கர்த்தர் உமக்குக் கொடுக்கக் கூடும். ...** என்று 2 நாளாகமம் 25:9–ல் பதிலளித்தார்.



**அமத்சியா வீரர்களை வீட்டிற்கு அனுப்பினார்**

கீழ்ப்படிதல் அவருக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தினாலும், அமத்சியா செவி கொடுத்து, வீரர்களை வீட்டிற்கு அனுப்பி விட்டு, தேவனை நம்பினார்.

கீழ்ப்படிதலுக்கு எப்போதும் செலுத்த வேண்டிய விலை ஒன்று உண்டு. ஆனால், கீழ்ப்படியாமைக்கு அதைவிட அதிக விலை உண்டு.

இந்தக் கட்டத்தில் அமத்சியா ஒரு தேவபக்தியுள்ள இராஜாவாகத் தோன்றினார். தேவனும் அவரைக் கனப்படுத்தினார்.

**அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் முழுமனதோடே அப்படிச் செய்யவில்லை** என்று வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது.

## இ. முழுமையான அர்ப்பணிப்பு இல்லாத தேவபக்தி

அமத்சியா பொல்லாதவனாகவோ அல்லது கலகக்காரனாகவோ இருக்கவில்லை. அவன் தன் தேவபக்தியுள்ள தகப்பனாகிய யோவாசைப் பின்பற்றினான். தேவனை முழு இருதயத்தோடு சேவித்த தாவீதைப் போலல்லாமல்.

அவன் நன்றாகத் தொடங்கினான். ஆனால், தேவன் நன்றாய் தொடங்குபவர்களை அல்ல, நன்கு முடிப்பவர்களையே தேடுகிறார். அமத்சியா செம்மையானதைச்



**'ஷாலேம்' என்பதற்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தல் என்று பொருள்**

செய்தான், ஆனால் உண்மையுள்ள இருதயத்தோடு அல்ல. எபிரெய வார்த்தையான 'ஷாலேம்' என்பதற்கு முழுமையான, பூரணமான, பிரிக்கப்படாத, முழுமையாக ஒப்புக் கொடுத்தல் என்று பொருள்.

அமத்சியாவின் பிரச்சனை ஒரு வரையறுக்கப்பட்ட கீழ்ப்படிதல் ஆகும். அவன் வெளிப்படையாக தேவனைப் பின்பற்றினான். ஆனால், தன் இருதயத்தின் சில பகுதிகளைத் தனக்கென்று வைத்திருந்தான்.

அன்பான சகோதர, சகோதரிகளே, நாமும் பின்வருவனவற்றைச் செய்வது சாத்தியம்:

- தசமபாகம் கொடுப்பது
- உண்மையாக ஊழியம் செய்வது
- ஒழுக்கத்துடன் வாழ்வது



**ஒருவர் ஆழமாக வேரூன்றி, மேல்நோக்கி கனி கொடுக்க வேண்டும்**

இருந்தபோதிலும், பெருமை, மன்னிக்காத குணம், காமம், புறங்கூறுதல், மறைவான பாவங்கள் அல்லது சுயவிருப்பம் ஆகியவற்றைப் பற்றிக் கொண்டிருப்பது.

உள்ளான அர்ப்பணிப்பு இல்லாத வெளிப்படையான கீழ்ப்படிதல் ஆகும்; இது நமது ஆவிக்குரிய வெறுமைக்கு வழிவகுக்கிறது. ஒருவர் ஆழமாக வேரூன்றி, மேல்நோக்கி கனி கொடுக்க வேண்டும்.

## 2. சமரசம்!

**அமத்சியா ஆதியில் அனுமதித்ததே இறுதியில் அவனை அழித்தது!**

(2 நாளாகமம் 25:11–16)

**மேடைகள் மாத்திரம் அகற்றப்படவில்லை;...** 2 இராஜாக்கள் 14:4.

தொடர்ச்சி 8–ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
Diploma in Theology &
Bachelor of Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும் !
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்) தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. கிளைச்சபைகள் – (சந்தோஷபுரம், பாலாஜி நகர் & வேளச்சேரி)
7. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
8. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
9. சுவிசேஷக் கூட்டங்கள்
10. கைப்பிரதி விநியோகம் – தொடர் ஊழியம்
11. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
12. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
13. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
14. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
15. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
16. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
17. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
18. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
20. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
21. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
22. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
23. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
24. இந்தி ஆராதனை – புதன் இரவு 7.00 மணி
25. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
26. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
27. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
28. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
29. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
30. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
31. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
32. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
33. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
34. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
35. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
36. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி


தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின் எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## என் தாழ்வில் என்னை நினைத்த ஆண்டவர்!

*நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.*

*- சங்கீதம் 136 :23.*

ஒருமுறை ஓர் குறிப்பிட்ட அயல்நாட்டில் உள்ள நண்பர் வீட்டில் நான் சில காலம் ஊழியம் செய்தேன். அவர் எனக்குத் தேவையான சகல அடிப்படை வசதிகளையும் கொடுத்திருந்தார்.

ஒருநாள் மாலையில் என் அறைக்கள் வந்த என் நண்பர் என்னைப் பார்த்து, கடந்த சில நாட்களாக ஏதோ ஒரு காரியத்திற்காக ஆண்டவரிடம் ஜெபம் பண்ணுவதாக நான் உணருகிறேன். அதைக் குறித்து அறிந்து கொள்ளலாமா ? அப்படியானால் சற்று விளக்கமாகச் சொல்லுங்கள் என்றார்.

நான் அவரிடம் கடந்த சில வருடங்களாக நாங்கள் வெளியிட்டு வரும் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை பிற அச்சகங்களில் அச்சிடுவதால் சரியான நேரத்தில் அவற்றை அச்சிட்டு வெளியிடுவதில் பல சிரமங்கள் உள்ளன. எனவே, ஓர் ஆப்செட் அச்சு இயந்திரத்திற்காக பாரத்துடன் ஜெபிக்கிறேன் என்று பதிலளித்தேன்.

மறுநாள் காலையில் நான் ஊழியத்திற்காக வெளியே புறப்படும்போது அவர்கள் (கணவனும், மனைவியும்) எங்கள் வீட்டை வங்கியில் அடமானம் வைத்து, கடன் வாங்கி அதனால் வரும் ஒரு பெருந்தொகையை **அழைப்பின் எதிரொலி ஊழியத்திற்குத்** தேவையான அச்சு இயந்திரம் வாங்கிக் கொடுக்கப் போவதாகக்கூறி, வங்கியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களை (விண்ணப்பம் மற்றும் உறுதிமொழிப் பத்திரம்) என்னிடம் காட்டினார்கள்.

ஆவியில் கலங்கி அதிர்ச்சியுற்ற நான் இப்படி உங்கள் வீட்டை அடமானம் வைத்து, கடன் வாங்கி ஊழியத்திற்கு அச்சு இயந்திரம் வாங்குவதை நான் ஏற்க மாட்டேன் என்கிற என் உறுதியான முடிவை அவர்களுக்குத் தெரிவித்தேன்.

இதைக் கேட்ட அக்குடும்பத்தினரும் ஆச்சரியப்பட்டு, பிழைக்கத் தெரியாத ஓர் இந்திய ஊழியர் என்று கூறி தங்கள் ஆழ்ந்த வருத்தத்தை தொடர்ந்து என்னிடம் வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தனர். நான் என் முடிவில் உறுதியாயிருந்து ஊக்கமாக ஜெபம் பண்ணினேன்.

நான் சில நாட்களில் இந்தியா வந்து விட்டேன். நாட்கள் கடந்தன. இந்தியாவில் உள்ள ஏழை மக்களுடைய உள்ளத்தில் ஏவி சிறிது சிறிதாகக் கிடைத்த காணிக்கைப் பணத்தைச் சேர்த்து ஓர் ஆப்செட் அச்சு இயந்திரத்தை வாங்க தேவன் உதவி செய்தார். கர்த்தர் நல்லவர் என்பதையும் (சங்கீதம் 34:8) உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் (நீதிமொழிகள் 28:20) என்பதையும் திட்டமாய் அனுபவித்து ஊழியம் செய்ய தேவ கிருபை என்னைத் தாங்குகிறது.

**அழைப்பின் எதிரொலி ஊழியங்களுக்கு** எவ்வித நிரந்தர வருமானமும் இல்லாவிட்டாலும் ஆண்டவர் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் எல்லாத் தேவைகளும் சந்திக்கப்பட தேவன் ஆசீர்வதிக்கிறார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக, ஆமென்.

**************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

அமத்சியா தான் அழிக்க வேண்டியதை சகித்துக் கொண்டான்.

சமரசம் எப்போதும் சிறியதாகவே தொடங்குகிறது. ஆனால், இன்று நாம் சகித்துக் கொள்வது நாளை நம்மை ஆதிக்கம் செலுத்தும்.

### அ. வெற்றிக்குப் பிறகு பெருமை!

**ஏதோமியர்களைத் தோற்கடித்த பிறகு, அமத்சியா அவர்களுடைய விக்கிர கங்களைக் கொண்டு வந்து அவற்றை வணங்கினான்** (2 நாளாகமம் 25:14).

இதைப் பற்றி சிந்தியுங்கள்:

தேவன் அவனுக்கு வெற்றியைத் தந்தார்.



**அமத்சியா அவர்களுடைய விக்கிரகங்களைக் கொண்டு வந்து அவற்றை வணங்கினான்**

- பெருமை நுழைந்தது
- பகுத்தறிவு நீங்கியது
- சமரசம் பின்தொடர்ந்தது

தோற்கடிக்கப்பட்ட மக்களின் தெய் வங்களுக்கு முன்பாக அவன் தலைவணங்கி னான். பாவம் எவ்வளவு வஞ்சகமானது என்பதற்கு இதுவே சான்று.

### ஆ. திருத்தத்தை நிராகரித்தல்!

முன்பு, அமத்சியா திருத்தத்தை ஏற்றுக் கொண்டான். இப்போது, பெருமை யால் நிறைந்தவனாக அதை நிராகரித்தான்.

. . . **தங்கள் ஜனத்தை உமது கைக்குத் தப்புவிக்காதே போன ஜனத்தின் தெய்வங்களை நீர் நாடுவானேன்** ... 2 நாளாகமம் 25:15.

அதற்கு அமத்சியா, ... **உன்னை இராஜாவுக்கு ஆலோசனைக்காரனாக வைத்தார்களோ ?** ... என்று அகந்தையுடன் பதிலளித்தான் (2 நாளாகமம் 25:16).

அவனுடைய மனப்பான்மையில் என்ன ஒரு பெரிய வித்தியாசம்! நாம் தேவனுடைய சிட்சைக்கு கீழ்ப்படிவதை நிறுத்தும் கணமே, நாம் அழிவை நோக்கிச் செல்லத் தொடங்குகிறோம்.

அனைத்தும் சாதகமாயிருந்த போது அமத்சியா கீழ்ப்படிந்தான்; ஆனால், கீழ்ப்படிதல் சங்கடமாக மாறியபோது, அவன் அதை நிராகரித்தான். நம்மை முதலில் அழிப்பது பாவம் அல்ல – அது தேவனுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பதே ஆகும். ஒவ்வொரு அடியிலும் அவருடைய சத்தத்தைக் கேட்கவும், அவருடைய வழிகளில் உண்மையுடன் நடக்கவும் நமக்கு தேவன் உதவுவார் என்பதே இந்த ஆண்டுக்கான என் ஜெபமாகும்.

**நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும் போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.** ஏசாயா 30:21.

எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் முழுமையாக நம்மை அர்ப்பணிக்கவும், அந்த வழிகாட்டும் சத்தத்திற்குக் கீழ்ப்படியவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

## இ. அமத்சியாவின் சமரசப்போக்கு, பெருமை, முரட்டாட்டம், குருட்டுத்தன்மை ஆகியவற்றுக்கு வழிவகுத்தது!

சமரசம் ஒரு ஆபத்தான தொடர் விளைவை உருவாக்குகிறது:

- பெருமை
- விக்கிரகாராதனை
- ஆலோசனையை நிராகரித்தல்
- சுயநம்பிக்கை
- எச்சரிக்கைகளைப் புறக்கணித்தல்
- முட்டாள்தனமான முடிவுகள்

மேலோட்டமான அர்ப்பணிப்பு ஆகியவை எப்போதும் சமரசத்திற்கு வழி வகுக்கிறது.

## 3. விளைவு!

### உங்களது அர்ப்பணிப்பற்ற வாழ்க்கை உங்களை அழிக்கும்!

(2 நாளாகமம் 25:17–28)

## அ. தேவன் அங்கீகரிக்காத ஒரு போர்!

தன் வெற்றியைக் குறித்துப் பெருமை கொண்ட அமத்சியா, இஸ்ரவேலின் இராஜாவை போருக்கு அழைத்தான். ஆனால், தேவன் அவனுடன் இல்லை.

தேவன் இல்லாத நம்பிக்கை ஆபத்தானது. வெற்றியே தேவனுடைய அங்கீகாரத்திற்கு ஆதாரம் என்று அமத்சியா கருதினான். இஸ்ரவேலின் இராஜா ஒரு உவமையின் மூலம் அவனை எச்சரித்தார். ஆனால், அமத்சியா அதை அலட்சியம் செய்தான். ஒரு மனிதனின் இருதயம் தேவனுக்கு ஒப்புக் கொடுக்கப்படாதபோது, தேவன் அனுப்பியவரின் வார்த்தைக்குக்கூடச் செவி கொடுப்பதை அவன் நிறுத்திவிடுகிறான்.

## ஆ. ஞானமான எச்சரிக்கைகளை அலட்சியம் செய்தல்!

அமத்சியாவின் பெருமையை எதிரிகள்கூட அடையாளம் கண்டு கொண்டனர்:

**. . . உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளப் பண்ணினது; இப்போதும் நீ உன் வீட்டிலே இரு; . . .** 2 நாளாகமம் 25:19.

'பெருமை' நம்மைச் சத்தியத்திற்கு குருடாக்கும்போது, நாம் பொது அறிவுக்குக் கூடச் செவிகொடுப்பதை நிறுத்திவிடுகிறோம். இந்த மதியீனத்திலிருந்து கர்த்தர் நம்மைப் பாதுகாப்பாராக!

## இ. சமரசம் செய்து கொண்டதால் அமத்சியாவிற்கு முழுமையான வீழ்ச்சி!

- அவனுடைய இராணுவம் தோற்கடிக்கப் பட்டது.
- எருசலேமின் மதில் இடிக்கப்பட்டது.
- ஆலயம் கொள்ளையடிக்கப்பட்டது.
- அவன் சிறைப்பிடிக்கப்பட்டான்.



எருசலேமின் மதில் இடிக்கப்பட்டது

- அவனுடைய வாழ்க்கை அவமானத்திலும், சதியிலும் முடிந்தது.

உறுதியுடன் தொடங்கிய அந்த மனிதன், முற்றிலும் நொறுக்கப்பட்ட நிலையில் முடிவடைந்தான்.

ஏன்? ஏனென்றால், அவன் சரியானதைச் செய்தான். ஆனால், உண்மையுள்ள இருதயத்துடன் செய்யவில்லை.

சிறிய சமரசங்கள் மூலம் அவர்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தார்கள்.

உறுதி – சமரசம் – விளைவு

## ஒரு இறுதி அழைப்பு: முழுமையான அர்ப்பணிப்பை தேர்ந்தெடுங்கள்!

அன்பான நண்பர்களே! தேவன் பரிபூரணத்தைக் கேட்கவில்லை. ஆனால், அவர் முழு இருதயத்துடனான தேவபக்தியை நம்மிடம் கேட்கிறார்.

- உறுதி நல்லது.
- அரை குறை அர்ப்பணிப்பு ஆபத்தானது.
- சமரசம் வளரும்.
- விளைவுகள் பின்தொடரும்.

அன்பினாலும் கருணையினாலும் தேவன் நம்மை அழைக்கிறார்:

**உங்களைத் தப்புவிக்க முடியாதவற்றின் பக்கம் ஏன் திரும்புகிறீர்கள்? திரும்பி வாருங்கள். முழுமையாக அர்ப்பணியுங்கள்.**

நீங்களும், நானும் முழுமையாகச் சரணடைந்த வாழ்க்கையை வாழும்படி, இயேசு சிலுவையில் தம் ஜீவனைக் கொடுத்தார்.

**திரும்பி வாருங்கள். முழுமையாகச் சரணடையுங்கள்.**

தேவனிடம் திரும்புங்கள். அவர் திறந்த கரங்களுடன் உங்களுக்காகக் காத்திருக்கிறார். அமத்சியாவை வழிதவறச் செய்த சறுக்கும் பாதையில் நாம் நடக்க வேண்டாம். உங்களையும், என்னையும் மீட்கவே கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, கல்வாரி சிலுவையில் தம் ஜீவனைத் தியாகம் செய்தார்.

நாம் சிந்திப்போம்

- நாம் சில காரியங்களில் மட்டும் அர்ப்பணிப்புடனும், மற்றவற்றில் சமரசத்துடனும் இருக்கிறோமா?
- கசப்பு, இரகசியப் பழக்கங்கள், போதைப் பழக்கங்கள் ஆகிய எந்த உயர்ந்த இடங்களை நாம் இன்னும் தகர்க்கவில்லை?
- நம் இருதயத்தின் எந்தப் பகுதி தேவனுக்கு முழுமையாக உண்மையுள்ளதாக இல்லை?

கர்த்தருடைய பார்வையில் சரியானதைச் செய்து, உண்மையுள்ள இருதயத்துடன் 2026–ஆம் ஆண்டை முடிக்க நாம் ஜெபத்துடன் முயற்சிப்போம்.

************

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

## OUR QR CODE:

ECHO OF HIS CALL

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

☆ **வருட சந்தா ரூ. 100/–** ☆ **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல் : (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th JANUARY 2026**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers**, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**